# ஆதரவிற்க்கான தூண்கள்

## Pillars of Support

SRDJA POPOVIC, SLOBODAN DJINOVIC, ANDREJ MILIVOJEVIC, HARDY MERRIMAN, AND IVAN MAROVIC

From the Book: CANVAS Core Curriculum: A Guide to Effective Nonviolent Struggle
Centre for Applied Nonviolent Actions and Strategies,
Translation: Vijay Anand, May 2018

# TRANSLATOR'S NOTES

Please insert any helpful information about this translation here.

**ஆதரவிற்க்கான தூண்கள்**

ஆட்சியாளர்கள் தாங்களாகவே வரி வசூலிக்க முடியாது, அடக்குமுறைச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது, சரியான நேரத்தில் ரயில் ஓட வைப்பது, தேசிய பட்ஜெட் தயாரிப்பது, போக்குவரத்தைச் சரிசெய்வது, துறைமுகங்களை நிர்வகிப்பது, கரன்சி அச்சிடுவது, சாலைகளைப் பழுது பார்ப்பது, காவல் துறை, ராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பது, தபால் தலைகளை விநியோகிப்பது அல்லது பசுவிடமிருந்து பால் கறப்பது என எந்தச் செயல்பாடாக இருந்தாலும் ஆட்சியில் இருப்பவர்களால் தனியாக இதையெல்லாம் செய்துவிட முடியாது. மக்கள் பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் மூலமாக இந்தச் சேவைகளைச் செய்கிறார்கள். மக்கள் இந்தத் திறன்களையும் சேவைகளையும் வழங்குவதை நிறுத்திவிட்டால், ஆட்சியாளர்களால் ஆட்சி நடத்த முடியாது. சமூகத்தில் அரசியல் அதிகாரத்தின் இயல்பு இதுதான் என்பதை நாம் புரிந்துகொண்ட பிறகு, அதிகாரம் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சமூகத்தில் அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் மக்கள்தான். ஆனால் அவர்கள் ஒன்றிணைந்து காவல் துறை, குடிமைச் சமூக சேவகர்கள், தொழிலாளர் குழுக்கள், வியாபாரிகள் குழு முதலிய அமைப்பாகவோ அல்லது நிறுவனமாகவோ செயல்பட்டால், மிக அதிகத் திறனுடன் அந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்த முடியும். இவற்றில் சில அமைப்புகள் உங்கள் எதிராளியை ஆதரிக்கலாம் பிறர் உங்கள் இயக்கத்தை ஆதரிக்கலாம்.

சமூகத்தில் உள்ள அதிகார அமைப்புகளை இவை தாங்கி நிற்பதால் இந்த அமைப்புகளை நாம் ஆதரவுத் தூண்கள் (Pillars Of Support) என்று குறிப்பிடுகிறோம். அகிம்சைப் போராட்டத்தின் தொடக்கத்தில், இந்த அமைப்புகளில் பல உங்கள் எதிராளிக்கு ஆதரவு வழங்கும். உங்கள் எதிராளியிடமிருந்து இந்த அமைப்புகள் தங்கள் ஆதரவை விலக்கிக்கொள்ளத் தொடங்கிவிட்டால், (இவற்றில் சில உங்கள் இயக்கத்தைத் தீவிரமாக ஆதரிக்கத் தொடங்கிவிடலாம்), உங்கள் எதிராளியால் கட்டுப்பாட்டை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது.

**எஸ்.பி.ஓ.** 1 **ஆதரவுத் தூண்களை வரையறுத்தல்.**
**(எங்கள் வசதிக்காக நாங்கள் இந்த முறையில் ஆதரவுத் தூண்கள் குறித்து வரையறுத்துள்ளோம்):**

---

***“ஆதரவுத் தூண்கள் என்பவை அந்தச் சமயத்தில் ஆட்சி நிர்வாகத்திற்கு அதிகாரத்திற்கான திறனைத் தக்கவைத்துக்கொள்ளவும், விரிவடையச்***

***செய்யவும் தேவைப்படும் அதிகார ஆதாரங்களை வழங்கும் சமூக நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்."***




ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் பல்வேறு ஆதரவுத் தூண்களை அடையாளம் காணலாம். இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கலாம்: காவல் துறை, ராணுவம், நீதித்துறை மற்றும் தேர்தல் கமிஷன், குடிமை சமூச சேவகர்கள், கல்வி அமைப்பு, முறைப்படுத்தப்பட்ட மத அமைப்புகள், அரசால் கட்டுப்படுத்தப்பட்ட ஊடகம், வர்த்த சமுதாயம் மற்றும் பிற அமைப்புகள்.

இவற்றில் "பொருளாதாரம்" அல்லது "மதம்" போன்ற சமூக செயல்பாடுகள் ஆதரவுத் தூண்களாகப் பட்டியலிடப்படவில்லை என்பதை கவனிக்கவும். சமூக செயல்பாடுகளை உருவாக்கவும் நிறைவேற்றுவதற்காகவும் உள்ள அமைப்புகள்தான் ஆதரவுத் தூண்கள். நீங்கள் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்த விரும்பினால், தற்போதைய அதிகார கட்டமைப்பு மற்றும் சமூக

செயல்பாடுகளை ஆதரிக்கும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை (ஆதரவுத் தூண்கள்) அடையாளம் கண்டு உங்கள் முனைப்புகளில் கவனம் செலுத்துங்கள்.

**முக்கியம்:**
ஆதரவுத் தூண்கள் மற்றும் சமூகசெயல்பாடுகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ளுதல்

**எஸ்.பி.ஓ. 2 பல்வேறு ஆதரவுத் தூண்களிடமிருந்து வெளியேறுவதைவிட அவற்றுடன் இணைவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல்.**

பல்வேறு ஆதரவுத் துண்களுக்குள் உள்ள மக்களின் செயல்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் வழிமுறைகளைக் கண்டறிவது ஒரு அகிம்சை இயக்கத்திற்கு மிகவும் முக்கியம். சில வழிமுறைகள் பின்வருமாறு:

- உங்கள் எதிராளி(களி)யிடம் அவர்களுக்கு உள்ள விசுவாசத்தைக் குலைத்தல்
- அவர்களது திறன்கள், அறிவு, பொருள் சார்ந்த ஆதாரங்கள் மற்றும் உங்கள் எதிராளிக்கு அவர்களது நேரம் உள்ளிட்டவற்றை வழங்க மறுப்பதற்கு இணங்கவைத்தல்,

ஒரு அகிம்சை இயக்கம் ஒரு குறிப்பிட்ட தூணின் ஆதரவைப் பெறுவதில் வெற்றி பெற்றுவிட்டால், அந்தத் தூணின் உறுப்பினர்கள் உங்கள் எதிராளியிடமிருந்து தங்கள் ஆதரவை விலக்கிக்கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிவார்கள்; வெளிப்படையாக அல்லது மறைமுகமாக உத்தரவுகளை மீறுவதன் மூலம், உத்தரவுகளைப் புறக்கணிப்பதன் மூலம், அல்லது மெதுவாக உத்தரவுகளை செயல்படுத்துவதன் மூலம், திறனற்ற முறையில் மற்றும்/அல்லது அரைகுறையாக செய்வதன் மூலம். சில தூண்களின் உறுப்பினர்களும்கூட வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாக உங்கள் இயக்கத்தை ஆதரிக்கத் தொடங்கலாம்.

பல்வேறு தூண்களின் நடந்துகொள்ளும் முறையில் தாக்கம் செலுத்த, அந்தத் தூணில் உள்ள உறுப்பினர்களை உங்கள் இயக்கத்தின் பக்கம் இழுப்பதற்கும் உங்கள் இயக்கத்திலிருந்து வெளியே தள்ளுவதற்கும் இடையேயான வேறுபாட்டைப் புரிந்துகொள்வது முக்கியம்.

உதாரணமாக, இதற்கு முன் பக்க படத்தைப் பார்க்கலாம், நீங்கள் ராணுவ சிப்பாய்களின் விசுவாசத்தைக் குலைக்க விரும்பினால், கடந்த



காலங்களில் வெற்றிகரமான இயக்கங்கள் பொதுவாக இதை அவர்களிடம் தெருக்களில், அவர்களும்கூட தந்தைகள், மகன்கள், கணவன்மார்கள் மற்றும் குடிமக்கள் என்பதை நினைவுபடுத்திப் பேசுவதன் மூலம், அவர்களது தேச பக்தியைத் தூண்டுவதன் மூலம், அவர்களது எதிராளிகளால் நிர்வகிக்கப்படப்போகும் சமூகம் தற்போதைய அரசாங்கத்தைவிட அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சிறந்ததாக இருக்கும் என்று உறுதி அளிப்பதன் மூலம் மேற்கொண்டுள்ளன. இந்த மாதிரியான நடவடிக்கை சிப்பாய்களின் விசுவாசத்தை அந்தத் தூணின் மையத்திலிருந்து விலக்கி, எதிரணியை நோக்கி இழுக்கும். இதற்கு எதிர்மாறாக, ராணுவ வீரர்களைத் தெருக்களில் மிரட்டுவது, கற்களை வீசுவது அல்லது அவர்களுக்கு எதிராக மற்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடும் இயக்கங்கள் அவர்களைத் தங்களை நோக்கி இழுக்காமல் அவர்கள் சார்ந்திருக்கும் தூண்களுக்கு மிக நெருக்கமாகத் தள்ளிவிடுகின்றன. இதுபோன்ற செயல்பாடு அரசுகலை வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தூண்டுகிறது, அதன் மூலம் தங்கள் வீரர்கள் தங்களுக்கு நெருக்கமாக வருவார்கள் என்பதும் வீரர்கள் மேலும் தீவிரமாகத் தங்கள் கட்டளைகளுக்கு கீழ்படிவார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

**எஸ்.பி.ஓ. 2 ஒவ்வொரு தூண் மூலமாகவும் அதிகாரம் செயல்படுத்தப்படும் வழிமுறைகளை வரையறுக்கவும் நம் சமூகத்தின் ஒவ்வொரு தூணின் முக்கியத்துவத்தின் அளவை மதிப்பீடு செய்வதும் முக்கியம்.**

இந்தப் பிரிவில், நாம் பல ஆதரவுத் தூண்களின் பொதுவான பண்புகளை ஆராய்வோம்.